## தூத்துக்குடி மாவட்டம் – எஸ்.குமாரபுரம் கிராமத்தில் நிகழ்ந்த

# சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் -நிதியுதவி !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.27-

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், எட்டயபுரம் நெடுஞ்சாலை, எஸ்.குமாரபுரம் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், எட்டயபுரம் நெடுஞ்சாலை, எஸ்.குமாரபுரம் எல்லைக்குட்பட்ட கிராமத்தில் நேற்று (25.12.2025) மாலை சுமார் 4.30 மணியளவில் தூத்துக்குடியிலிருந்து இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த பாதயாத்திரிகள் மீது பின்னால் வந்த கார் ஒன்று எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் திருச்செந்தூர், வீரபாண்டி பட்டணத்தைச் சேர்ந்த திருமதி.சுந்தர ராணி (வயது 60) க/பெ.ராமமூர்த்தி, திருமதி.இசக்கியம்மாள் (வயது 55) க/பெ.வடிவேல் மற்றும் கீழ திருச்செந்தூர், கரம்பாவிளையைச் சேர்ந்த திருமதி. கஸ்தூரி (வயது 55) க/பெ.சுந்தரம் ஆகிய மூன்று பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்த மூன்று பெண்களின் குடும்பத்தினருக்கும்,

அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.



மதுரை கிழக்கு தொகுதி கிழக்கு (தெற்கு) ஒன்றியத்திற்குட்பட்ட கருப்பாயூரணி மற்றும் ஆண்டார் கொட்டாரம் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மக்கள் சந்திப்பு சுற்றுப்பயணம் மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்ததுடன் முடிவுற்ற மக்கள் நலத்திட்ட பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, ஒன்றிய செயலாளர் ஹக்கீம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் வினோத், ஒன்றிய அவைத்தலைவர் முருகன், பொருளாளர் தாஜுதீன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

## நெல்லை மேற்கு மாவட்டத்தில் - விடுபட்ட வாக்காளர்களை

# புதிதாகச் சேர்த்திடும் பணியில் கழகத்தினர் ஈடுபடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை.டிச.27.

நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் திருநெல்வேலி மேற்கு மாவட்டம், அம்பாசமுத்திரம் ஆலங்குளம் சட்டப்பேரவை தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களுக்கு புதியதாக சேர்க்கவும் மற்றும் 18 வயது நிறைந்தவர்களுக்கும்,முகவரி மாற்றம் மற்றும் வாக்கு சாவடி மாற்றம் படிவம் உள்ளிட்ட படிவங்களை நிரப்பி வழங்கிட உதவி மையங்கள் அந்தந்த வாக்குச் சாவடிகளில், இன்று (27.12.2025 – சனிக்கிழமை) நாளை (28.12.2025 – ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரண்டு நாட்கள் அம்பாசமுத்திரம்,ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிகளில் நடைபெற உள்ளது.

எனவே ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அவரவர் பகுதியில் உள்ள (BLA 2,)(BDA ) ஆகியோர்களை இன்றும் – நாளையும் ஆகிய இரண்டு நாட்களும் முழுமையாக பயன்படுத்தி இந்த பணியினை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.


குறிப்பு: இரண்டு நாட்களும் கழக நிர்வாகிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள ஒவ்வொரு வாக்கும் நமக்கு முக்கியம் என்பதை மிக கவனத்துடன் உணர்ந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” – இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை,டிச.27-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி இன்று (27.12.2025) சனிக்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 67அ , பாகம் 135. இடம்: எண்.7/4, திருவள்ளுவர் குறுக்கு தெரு, கென்னடி சதுக்கம், செம்பியம், பெரம்பூர், சென்னை-11.

மாலை: 4.30 மணி: வட்டம் 67அ , பாகம் 136. இடம்: எண்.10, காமராஜர் தெரு, செம்பியம், பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.00 மணி: வட்டம் 64அ , பாகம் 137, இடம்: எண்.33/34, கென்னடி சதுக்கம் பிரதான சாலை, செம்பியம், பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.30 மணி: வட்டம் 64அ , பாகம் 138, எண்.38, பொன்னுசாமி நகர் 2வது தெரு, செம்பியம், பெரம்பூர், சென்னை-11.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64அ , பாகம் 33 , இடம்: 33வது தெரு, G.K.M.காலனி, சென்னை-82.

மாலை: 4.30 மணி: வட்டம் 65, பாகம் 59, இடம்: 16/9, சன்னதி தெரு, கொளத்தூர்-99.

மாலை: 5.00 மணி: வட்டம் 65, பாகம் 60, இடம்: எண்.17, வரலட்சுமி நகர், கொளத்தூர்-99.

மாலை: 5.30 மணி: வட்டம் 65அ , பாகம் 65, இடம்: எம்.ஜி.ஆர்.நகர், கொளத்தூர்-99.

மாலை: 6.00 மணி: வட்டம் 65அ , பாகம் 67, கண்ணகி நகர், கொளத்தூர்-99

மாலை: 6.30 மணி: வட்டம் 69 , பாகம் 230, சோமசுந்தரம் 1வது தெரு, சென்னை-82.

துறைமுகம் கிழக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 55ஆ, பாகம்: 65, 66, 67. இடம்: 106, உடையார் பார்ட்டி ஹால், ஆச்சாரப்பன் தெரு, சென்னை-1.

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 54அ , பாகம்: 32, 33, 34. இடம்: தாண்டவராய பிள்ளை தெரு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 99அ , பாகம்: 110, 112, 109.

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 108 , பாகம்:113, 119, 129. இடம்: ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு.

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 75 , பாகம்:76, 77.

மாலை: 5.30 மணி: வட்டம் 73 , பாகம்:197, 198

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 97அ , பாகம்: 182, 183, 184. இடம்: வீராசாமி தெரு, 1,2, 3 தெருக்கள், சோலையம்மன் கோயில் தெரு, திருமலா பிளாட்ஸ், ஆகாஷ் நகர் கே.பிளாட், முத்தம்மன் நகர்.

மாலை: 4.30 மணி: வட்டம் 97 , பாகம்: 166, 176. இடம்: நாகேஸ்வர குருசாமி தெரு, பச்சைக்கல் வீராசாமி தெரு.

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 95 , பாகம்:4, 10, 25. இடம்: சீயாளம் மெயின் தெரு, பஜனை கோயில் பிரதான சாலை, காந்தி தெரு.

மாலை: 6.00 மணி: வட்டம் 95அ , பாகம்:75, 80, 85. இடம்: அகத்தியர் நகர், எம்.பி.பிளாக், திருமங்கலம் ரோடு, எம்பார் நாயுடு 2வது தெரு.

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம் 79அ, பாகம்: 117. இடம்: இந்திரா காந்தி தெரு, வெங்கடேஸ்வரா நகர்.

மாலை: 4.30 மணி: வட்டம் 80, பாகம்: 14. இடம்: பானு நகர், 20வது அவென்யு

மாலை: 5.00 மணி: வட்டம் 81, பாகம்: 137. இடம்: திருவள்ளுவர் நகர்

மாலை: 5.30 மணி: வட்டம் 85, பாகம்: 215. இடம்: பஜனைகோயில் தெரு, மங்களபுரம்

மாலை: 6.00 மணி: வட்டம் 85, பாகம்: 216. இடம்: பாடசாலை தெரு, மங்களபுரம்

மாலை: 6.30 மணி: வட்டம் 86, பாகம்: 236. இடம்: டவுன்சிப் காலனி

அம்பத்தூர் தெற்கு பகுதி.

மாலை: 5.00 மணி: வட்டம் 93, பாகம்: 315. இடம்: பாடி குப்பம், ரயில் நகர்

மாலை: 5.00 மணி: வட்டம் 88,பாகம்: 291. இடம்: ஜவகர் நகர், தேவர் நகர்

மாலை: 5.30 மணி: வட்டம் 88, பாகம்: 292. இடம்: தேவர் நகர், கொடிகம்பம் அருகில்

மாலை: 5.30 மணி: வட்டம் 89, பாகம்: 295 இடம்: டி.வி.எஸ்.காலனி

மாலை: 6.00 மணி: வட்டம் 89, பாகம்: 246 இடம்: முல்லை காலனி

மாலை: 6.00 மணி: வட்டம் 90, பாகம்: 330இடம்: பாடி புதுநகர் 6வது தெரு, 8வது தெரு

மாலை: 6.00 மணி: வட்டம் 90, பாகம்: 331 இடம்: பாடி புதுநகர் 6வது தெரு, 8வது தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 93, பாகம்: 323. இடம்: பாடி குப்பம், வீரமாமுனிவர் தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 87, பாகம்: 183 இடம்: 4வது தெரு, TNHB காலனி, கொரட்டூர்.

மாலை: 6.30 மணி: வட்டம் 87, பாகம்: 268 இடம்: ராஜா தெரு, கொரட்டூர்.

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 84அ, பாகம்: 190. இடம்: முதல் வன்னியர் தெரு, கொரட்டூர், சென்னை-80

மாலை: 5.30 மணி: வட்டம் 84அ, பாகம்: 192. இடம்: இரயில்வே ஸ்டேசன் ரோடு, கொரட்டூர், சென்னை-80.

மாலை: 6.00 மணி: வட்டம் 82 பாகம்: 69. இடம்: இ.பி.காலனி, அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 6.30 மணி: வட்டம் 82 பாகம்: 84. இடம்: ஏகாம்பரம் நகர், மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 7.00 மணி: வட்டம் 83, பாகம்: 47 இடம்: அக்ரஹாரம், கண்டிகை, கொரட்டூர், சென்னை-79.

மாலை: 7.30 மணி: வட்டம் 83, பாகம்: 48. இடம்: அக்ரஹாரம், சீயாத்தம்மன் கோயில் தெரு, கொரட்டூர், சென்னை-79.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர் பாபு அறிவித்துள்ளார்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.108, சேத்துப்பட்டு, எம்.எஸ். நகர் திட்டப் பகுதியில் பழைய குடியிருப்பை அகற்றிவிட்டு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டும் பணி நிறைவடையும் நிலையில் இருப்பதை ஆய்வு செய்தார்.

## 100 நாள் வேலை ஒழிப்புத் திட்டம் : ஒன்றிய அரசைக் கண்டித்து -

# ஈரோடு தெற்கு, வடக்கு, மத்திய மாவட்டங்களின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அந்தியூர் ப.செல்வராசு – கே.இ.பிரகாஷ் – என்.நல்லசிவம் – தோப்பு என்.டி.வெங்கடாசலம் – எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் பங்கேற்பு!

ஈரோடு, டிச. 27-

தலைமை கழக அறிவிப்பின்படி அண்ணல்காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசை அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

ஈரோடு தெற்கு மாவட்டத்தில் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் கஸ்பாபேட்டை ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் சு.குணசேகரன்மொடக்குறிச்சிகிழக்குஒன்றியம்எழுமாத்தூர் ஊராட்சி எமாத்தூரில் ஒன்றிய கழக செயலாளர் கதிர்வேல் மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் குலவிளக்கு ஊராட்சியில்குலவிளக்கில் ஒன்றிய கழக செயலாளர் விஜயகுமார் கொடுமுடி மேற்கு ஒன்றியம் இச்சிபாளையம் ஊராட்சி தாமரைப்பாளையத்தில் ஒன்றியசெயலாளர்நடராஜன் கொடுமுடி தெற்கு ஒன்றியம் எழுநூத்திமங்கலம் ஊராட்சி குப்பம் பாளையம் ஒன்றிய செயலாளர் கொடுமுடி வடக்கு கொளத்துப்பாளையம் ஊராட்சி கொம்பனை புதூர் ஒன்றிய செயலாளர் சென்னிமலை ஒன்றியம் வடமுகம் வெள்ளோடு ஊராட்சி ஜி.ஹெச் ரவுண்டான அருகில் ஒன்றிய செயலாளர் செங்கோட்டையன்ஈரோடுஒன்றியம் மேட்டு நாசம் பாளையம் ஊராட்சி காலிங்கராயன் பாளையத்தில் ஒன்றிய செயலாளர்தோப்புசதாசிவம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஈரோடுவடக்குமாவட்டம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அந்தியூர் ஒன்றியத்தில் அந்தியூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளரும், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.ஜி.வெங்கடாஜலம், கழக விவசாய அணி இணைச் செயலாளர் கள்ளிப்பட்டி மணி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.பி.புகழேந்தி டி என் பாளையம் ஒன்றியத்தில் கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் ஏ. பெருமாள் சாமி, கோபி ஒன்றியத்தில் மாநில நெசவாளரணி துணை செயலாளர் ஜி.வி. மணிமாறன், மாநில மகளிரணி ஆலோசனைக் குழு உறுப்பினர்காயத்ரிசீனிவாசன், நம்பியூர்ஒன்றியத்தில் மாநில மருத்துவணி துணைத்தலைவர்டாக்டர் எம்.செந்தில்நாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்ஜீ.வி.குமணன் சக்தி ஒன்றியத்தில் மாவட்டகழகசெயலாளர் என்.நல்லசிவம், மாநில விவசாய அணி இணை செயலாளர் எல்.பி.தர்மலிங்கம், பவானிசாகர் ஒன்றியத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஒ. சுப்பிரமணியம், மாவட்ட துணை செயலாளர் கீதா நடராஜன், தாளவாடி ஒன்றியத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் எஸ். எஸ்.குருசாமி ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்நடைபெற்றது.

ஈரோடு மத்திய மாவட்டத்தில்நடைபெற்றஆர்ப்பாட்டத்தில் பெருந்துறை ஒருங்கிணைந்த ஒன்றியத்தில்பெருந்துறைஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வடக்குஒன்றியகழகசெயலாளர் பால் சின்னசாமி தலைமையில்ஒன்றியசெயலாளர்கள் சி.பெரியசாமி, டி.பி.கனகராஜ், பி.செல்வராஜ், பொதுக்குழுஉறுப்பினர் டி.ஜி.கே.பூபதி ஆகியோர் முன்னிலை யில் ஊத்துக்குளி ஒருங்கிணைந்தஒன்றியம்ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊத்துக்குளி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செ.சுப்பிரமணி தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் கொண்டசாமி, ஒன்றிய செயலாளர்கள் வி.ராஜா, என்.பிரபு ஆகியோர்முன்னிலையில் பவானி ஒருங்கிணைந்த ஒன்றியம் பவானி ஊராட்சிஒன்றியஅலுவலகத்தில்பவானிதெற்குஒன்றிய செயலாளர் கே. பி.துரைராஜ்தலைமையில் ஒன்றிய செயலாளர் கே.ஏ.சேகர், மகேந்திரன் அம்மாபேட்டை ஒருங்கிணைந்த ஒன்றியம் அம்மாபேட்டை கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர்அறிவானந்தம் தலைமையில் ஒன்றிய செயலாளர் அசோக்குமார், கே.வி.சுந்தரம், பொதுக்குழு உறுப்பினர் எம்.சம்பத்குமார் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டனஆர்ப்பாட்டத்தில் அந்தந்த பகுதிகளில் உள்ள இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், ஈரோடு தெற்கு, வடக்கு, மத்திய மாவட்ட கழகத்தின்மாநில,மாவட்ட,ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணியாற்றி வரும்பயனாளிகள்,பொது மக்கள் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டனர்.

## டிச.26 – ஜனவரி 25ம் தேதி வரை

# இருப்பிட சான்றிதழை கட்டணமில்லாமல் பெறலாம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை,டிச.27

டிச.26.12.2025 (நேற்று) முதல் ஜனவரி 25ம் தேதி வரை இருப்பிட சான்றிதழை கட்டணமில்லாமல் பெறலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இருப்பிட சான்றிதழ் கோருவோருக்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு இந்த நடவடிக்கை எடுத்துள்ளது. கட்டணமில்லாமல் இருப்பிட சான்றிதழ் வழங்க துணை வட்டாட்சியர்களுக்கு அதிகாரமளித்து தமிழ்நாடு அரசு இவ்வாறு உத்தரவிட்டது.



சென்னை வடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் ஆர்.கே நகர் தொகுதி கொருக்குப்பேட்டை கருமாரியம்மன் நகர் பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் சென்னை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் மருத்துவர் வை.கலைவாணன் , ஆர்.கே நகர் தொகுதி அமைப்பாளர் ஜே.ஜே.பிராங்கிளின் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட செயலாளர் ஆர்.டி. சேகர் எம்எல்ஏ , நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி , சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் , தலைமை செயற்குழு உறுப்பினர் தா.இளைய அருணா ஆகியோர் கலந்து கொண்டு மருந்து மாத்திரைகளை வழங்கினர். இதில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் , பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் , மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் மருத்துவர் கீர்த்தனா , மாவட்ட மருத்துவர் அணி தலைவர் மருத்துவர் பாண்டியராஜன் , மருத்துவர் அணி நிர்வாகிகள் பி.சதீஷ்குமார் , ஏ.ஷேக் அப்துல்லா , விஜயகுமார், மெடிக்கல் பெ.கணேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.